**<u>சென்னை–6, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்(தொஅஈ) பொ</u>**
**<u>அவர்களின் செயல்முறை ஆணை</u>**
**<u>முன்னிலை : மரு.ஜெ.ராஜமூர்த்தி, M.B.B.S., D.C.H.,</u>**

**<u>ந.க.எண்.1758/தொஅஈ/அ.நு/1/2019</u>** **<u>நாள்: 09.12.2022.</u>**

பொருள்: அலுவலக நடைமுறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – செல்வி.ஜெ.லாவண்யா த/பெ.(அமரர்) திரு.ம.ஜெயபால், மருத்துவமனைப் பணியாளர், தொஅஈ மருந்தகம், இருகூர் கோவை மண்டலம் – கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை – ஆணை வழங்கல் – தொடர்பாக.

பார்வை:
1. இவ்வியக்கக பணி நியமன ஆணை ந.க.எண்:1758/தொஅஈ/அ.நு/1/2019, நாள்: 24.02.2020.
2. அரசாணை (நிலை) எண்:18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:23.01.2020 .

*******

கோவை மண்டலம், இருகூர் தொ.அ.ஈ மருந்தகத்தில் மருத்துவமனைப் பணியாளராகப் பணிபுரிந்து பணியில் இருக்கும் போதே 29.10.2016 அன்று காலமான திரு.ம.ஜெயபால் என்பாரது தற்காலிகப் பணி மருத்துவமனைப் பணியாளர் பதவியில் 21.11.2007 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு 20.11.2008 பிற்பகல் தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். இறந்த அரசு ஊழியர் திரு.ம.ஜெயபால், மருத்துவமனைப் பணியாளர் என்பவரின் பிறந்த தேதி.04.04.1964 என்பதால் இவரது ஓய்வு பெறும் நாள்.30.04.2024 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகள் செல்வி.ஜெ.லாவண்யா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி, உரிய கால கெடுவுக்குள், உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள, அதன் தொடர்புடைய அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016) –ன் படி, பணியிடையே 29.10.2016 அன்று, இயற்கை எய்திய திரு.ம.ஜெயபால் என்பாரின் மகளும் வாரிசுதாரருமாகிய செல்வி.ஜெ.லாவண்யா (பிறந்த தேதி: 06.03.1995) தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500–62000/– நிலை 8 (Level–8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டு, கோவை மண்டலம், ஒண்டிப்புதூர், தொ.அ.ஈ மருந்தகத்தத்தில் 29.02.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.ஜெ.லாவண்யா என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி, பார்வை 2–ல் காணும் அரசாணையின் படி, அவர் பணியில் இணைந்த நாளான 29.02.2020 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவர் **"பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருட கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். அந்த இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்று ஆண்டு கால அவகாசத்திற்குள் வெற்றிகரமாக முடித்திடல் வேண்டும்". மேற்படி காலத்தில் மருத்துவ விதித் தொகுதி தேர்வு மற்றும் பவானி சாகர் சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி (Civil Service Training Institute Bhavanisagar Foundational Training) தேர்ச்சி பெற வேண்டும்.** இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின், அதை பெற விதிகளின் படி தகுதியுடையவராகிறார்.

**ஒம்/–ஜெ.ராஜமூர்த்தி**
**மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்**
**இயக்குநர்(தொஅஈ)பொ**

**பெறுநர்:**

செல்வி.ஜெ.லாவண்யா,
இளநிலை உதவியாளர்,
தொஅஈ மருந்தகம், ஒண்டிப்புதூர்.
(மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்(தொஅஈ), கோவை வாயிலாக)

**நகல்:**

1. மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்(தொஅஈ), கோவை.
2. பொறுப்பு மருத்துவ அலுவலர், தொஅஈ மருந்தகம், ஒண்டிப்புதூர்.
3. இவ்வியக்கக நிர்வாகப் பிரிவு–2.
4. இருப்புக் கோப்பு / உபரி.

**//உண்மை நகல்//அனுப்பப்படுகிறது//**

13/12/2022
**நிர்வாக அலுவலர்(தொஅஈ)**
12/12/22
13/12/2022